1981 ஆகஸ்ட் 29]

(ஆ) மாதவரம் பால்பண்ணையில் உதவி இயக்குநர் பதவி என்ற பதவி இருந்து வந்தது. அந்தப் பண்ணை கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் அதிகாரத்துக்குள் வந்த பிறகு இந்தப் பதவியினை பால் பண்ணையிலிருந்து பால்வளத் துறைக்கு மாற்ற வேண்டுமென பால்வளத் துறை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்தார். அந்தப் பதவியினை பால்வளத் துறைக்கு மாற்றுவதற்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் சம்மதம் தெரிவித்தார். அரசின் உத்தரவு பெற்று பால்வளத் துறை ஆணையாளரால் இந்தப் பதவி நிரப்பப்படும். இராணிப்பேட்டையிலுள்ள நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு துணை இயக்குநர் பதவி காலியாக உள்ளது. இந்தத் துணை இயக்குநர் என்கிற பெயரினை ஆராய்ச்சி அலுவலர் என பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பதவியினை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. எஸ். சிவராமன்: துணை இயக்குநர் பதவி, உதவி இயக்குநர் பதவி நிரப்பப்படாமல் இருந்தால் அது எவ்வளவு காலமாக காலியாக இருந்தது? எப்போது நிரப்பப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கால்நடை அலுவலர், அரசு பாற்பண்ணை, மாதவரம் 1–7–79–ல் இருந்து நிரப்பப் படாமல் உள்ளது. துணை இயக்குநர் பதவி, இராணிப்பேட்டை 3–10–80–ல் இருந்து நிரப்பப்படாமல் உள்ளது. இயக்குநரின் ஆணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் நிரப்பப்படும்.

திருநாகேஸ்வரம் பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவநிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 140—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் (I.C.D.P.) திட்டத்தின்கீழ் ஒரு கால்நடை மருத்துவநிலையம் அமைக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை,

(ஆ) இவ்வினா எழாது.

திரு. செ. இராமலிங்கம்: திருவிடைமருதூர் ஒன்றியத்தில் உள்ள திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கவேண்டும் என்று மாவட்ட வளர்ச்சிமன்றக் குழுவிலிருந்து அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்கு எட்டு கிலோ தொலைவிற்குள் வேறு கால்நடை மருத்துவமனை இல்லை. எனவே, உடனடியாக மீண்டும் இதுகுறித்து பரிசீலனை செய்து அங்கே ஒரு

கால்நடை மருத்துவமனை அமைக்க முடிவு எடுக்கப்படுமா? மேலும், அமைச்சர் அவர்களின் தொகுதியிலே வலங்கைமான் பேரூராட்சியில் ஐ ஸி டி. பி. சப்-சென்டர்-ம், அனிமல் ஹஸ் பென்ட்ரி ஹாஸ்பிட்டலும் ஒரேயிடத்தில் இருக்கின்றன. எனவே, பொதுநலன் கருதி இவை இரண்டும் ஒரேயிடத்தில் இல்லாமல் ஐ. ஸி. டி. பி. சப்- சென்டரை வேறு இடத்திற்கு மாற்றிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய் வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : திருவிடைமருதூர் ஒன்றியத்தின் எல்லையில் நாச்சியார்கோவில் மற்றும் ஆடுதுறை யில் இரண்டு கால்நடை மருநதகங்கள் செயல்பட்டு வருகின்றன. தவிரவும் மேற்படி பஞ்சாயத்து ஒன்றியத்தின் எல்லைக்குள் ஏழு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு அப்பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு மருத்துவ உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அரசு வரும் ஆண்டுகளில் ஐ. ஸி. டி. பி. போன்ற திட்டங்களை அங்கீகரிக்கும்போது தஞ்சை மாவட்டத்தில் மற்ற இடங்களுக் கும் இந்தத் திட்டத்தைப் படிப்படியாக விரிவுபடுத்த ஆவன செய்யப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: திருநாகேஸ்வரம் பேரூராட்சிக்கு எட்டு கிலோ தூரத்தில் நாச்சியார் கோவிலில் ஆடுதுறையில் இருக்கின்றன. எனவே, எட்டு கிலோ தூரத்தில் வேறு கால் நடை மருத்துவமனை இல்லாததால் உடனடியாக பொது மக்கள் நலன் கருதி திருநாகேஸ்வரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன் வருமா? எனக்குக் கிடைத்த தகவல்படி மண்டல துணை இயக்குநரிடமிருந்து இலவசமாகப் பேரூராட்சிக் கட்டடத்தை ஒரு ஆண்டு கொடுத்தால் நாங்கள் உடனடியாக ஆரம்பிக்கிறோம் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு முடிவு இருப்பதாக அறிகிறேன். எனவே மீண்டும் பரிசீலனை செய்து திருநாகேஸ் வரம் பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துமனை துவங்கப் படுமா?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதி யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது,

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டுகளில் கண்டிப்பாக அமுல் நடத்தப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 7 கிளை கால்நடை பராமரிப்பு நிலையங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதியில் அந்தக் கிளை நிலையங்களில் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், மூடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு உடனடி யாக பணியாளர்களை நியமனம் செய்து அந்தக் கால்நடை நிலையங்களை உடனடியாகத் துவங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பு இல்லை யென்றாலும், எங்கெங்கு கால்நடை பணியாளர்கள் ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றனவோ, அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் கொடுத்தால், அது விரைவில் நிரப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. ரா. உமாநாத்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே நம்முடைய அவைக் கூட்டத்தில் நடந்த ஒரு விவாதத்திலே எரி சாராயம் விஷயமாக சில குறிப்பிட்ட பெயர்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மென்ஷன் பண்ணி, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் உங்களுடைய டெசிஷனை கோட் பண்ணி இந்த மாதிரி அவையிலே இல்லாதவர்கள் பெயர்களைச்சொல்லக் கூடாது என்ற டெசிஷனைஅப்-ஹோல்ட் பண்ணி, எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறீர்கள். அந்தமாதிரி உள்ள நடவடிக்கையைப் பற்றியும், முதலமைச்சர் நடவடிக்கையைப் பற்றியும் விசாரணை செய்ய வேண்டும் என்று ரே கமிஷன் உத்தரவிட்டது தெரியும். இதைப் பற்றி ஒரு உரிமை மீறல் நோட்டீஸ், இந்த அவையின் நடவடிக்கை பற்றி விசாரணைக்கு விட்டது சம்பந்தமாக நான் உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அது மிஸஸ் காந்தி, தண்டபாணி, எம்.பி., அன்பரசு, எம்.பி., ஆகியோர்மீது கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று, என்பது எனக்குத் தெரிய வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சட்டமன்ற நிகழ்ச்சி நடைபெற்ற அந்தச் சமயத்தில், எங்கள் கட்சித் தலைவர் பேசினார்கள், அந்தப் பேச்சிலே சில பெயர்களை மென்ஷன் பண்ணக் கூடாது, அதை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதிலே என்ன நடந்தது? என்னென்ன பெயர்களைச் சொன்னார்கள்? எதை எதை நீக்கினீர்கள்? அது எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்கும்போது, அதை அவர்கள் எப்படி ரெயிஸ் பண்ண முடியும்? அதை சட்டமன்றத்திலே தாங்கள் தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால், என்ன புரோசீடிங்ஸ் நடந்தது? என்னென்ன பெயர்களைச் சொன்னார்கள் என்பதை திரு. உமாநாத் அவர்கள் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த உரிமைப் பிரச்னையை ஏற்றுக் கொண்டால்தான் அது வரும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS